பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா 1909 - 2009



# சர்.பிட்டி. தியாகராயர்

(1852-1925)



# டாக்டர். சி.நடேசனார்

(1875-1937)



# டாக்டர். டி.எம்.நாயர்

(1868-1919)

## வாழ்க்கைக் குறிப்பு

தமிழரசு
அலுவலகப் பிரதி

# சர்.பிட்டி. தியாகராயர்
# டாக்டர். சி. நடேசனார்
# டாக்டர். டி.எம். நாயர்

ஆகியோரின்

வாழ்க்கைக் குறிப்பு

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

சிறப்பு வெளியீடு எண்.18

தமிழரசு இலவச வெளியீடு

செப்டம்பர் 2008

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
சென்னை – 600 002.

# சர்.பிட்டி. தியாகராயர்

(1852–1925)



சர்.பிட்டி. தியாகராயர், 1852 ஆம் ஆண்டு ஏப்ரல் 27 ஆம் நாள் சென்னைக்கு அருகில் உள்ள ஏகாத்தூரில் பிறந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்று 1873 இல் பி.ஏ., பட்டப்படிப்பு முடித்தார். 1881ஆம் ஆண்டு Madras Native Association எனும் அமைப்பை நிறுவி பொது வாழ்வில் ஈடுபட்டார். 1882இல் சென்னை நகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 40 ஆண்டுகள் பணியாற்றினார். அரசின் உதவியினைப் பெற்று புதிய தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி நெசவுத் தொழில் மற்றும் குடிசைத் தொழில்களை ஊக்குவித்தார். 1919ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1923 வரை அந்தப் பதவியை வகித்து மக்கள் தொண்டாற்றினார்.

முதன் முதலாக சென்னையில் தென் இந்திய வர்த்தக சபையைத் தொடங்கி 1910 முதல் 1921 வரை அதன் தலைவராக இருந்தார். ஆரம்பத்தில் காங்கிரஸ் கட்சியில் பணிபுரிந்து, பின்னர் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) தொடங்கி, 1916

ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் 20ஆம் நாள், பிராமணரல்லாதோர் இயக்கத்தினை உருவாக்கி, அவ்வியக்கத்திற்கான கொள்கை விளக்க அறிக்கை வெளியிட்டார். இந்த அறிக்கை நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. 1920–இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்றது. கவர்னர் லார்ட் வெலிங்டன், தியாகராயரை அமைச்சரவையில் முக்கியப் பொறுப்பு ஏற்க அழைத்தார். ஆனால், அதனை ஏற்கவில்லை. தியாகராயர் சென்னை நகராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1923–வரை தொடர்ந்து சென்னை நகராட்சித் தலைவராகப் பணி ஆற்றினார்.

தியாகராயரின் சேவையைப் பாராட்டி அரசு 1909–இல் அவருக்கு “ராவ் பகதூர்” பட்டத்தை அளித்தது. 1918 இல் “திவான் பகதூர்” பட்டமும், 1920 இல் “சர்” பட்டமும் அளிக்கப்பட்டது.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட சர்.பிட்டி. தியாகராயர் 1925 ஏப்ரல் திங்கள் 28 ஆம் நாள் தனது 73 ஆவது வயதில் இயற்கை எய்தினார். அவர்தம் நினைவாக சென்னையில் ஒரு பகுதிக்கு தியாகராயநகர் என்று பெயரிடப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சி அலுவலக முகப்பில் தியாகராயரின் சிலையும், தியாகராயர் நகரில் சர். பிட்டி. தியாகராயர் அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது.

## Sir. Pitty Theyagarayar
(1852-1925)

Sir. Pitty Theyagarayar was born at Egathur near Chennai on 27th April, 1852. He took his B.A. degree in 1873 from the Presidency College, Madras. Later he entered public life and served as a member of the Madras Municipal Corporation for 40 years since 1882. He supported improved methods of weaving and strongly pleaded for Government help and encouragement to handloom and other cottage industries. Then from civic side he moved on to provincial politics and was elected to the Madras Legislative Council in 1910.

His active participation in the promotion of commercial activities led him to establish the South Indian Chamber of Commerce of which he was the Chairman from 1910 to 1921. He started his political career as an ardent supporter of Congress. He started the Non-Brahmin Movement and the Justice Party and released the manifesto on 20th November 1916 which created a lot of sensation.

In 1920 the Justice Party got a decisive majority in the Legislative Council. He was invited by Lord Wellington

the then Governor to be a responsible member of the new ministry, but he declined the invitation. He was elected as Chairman, Chennai Municipality in 1920 and held that post until 1923.


In appreciation of his selfless services to the people the Government honoured him with the title of 'Rao Bahadur' in 1909. He was also conferred with the title "Diwan Bahadur" in 1918 and "Sir" in 1920.

He who set an example of selfless, courageous, honest and honourable service in the public life passed away on April 28th 1925 at the age of 73. Theagaraya Nagar, an area in Chennai was named in memory of him.

A statue of Sir. Pitty Theyagarayar has been erected in front of Chennai Corporation Office and an auditorium constructed in Theagaraya Nagar has been named after him.

# டாக்டர் சி. நடேசனார்

(1875–1937)



திராவிட இயக்கத்தின் தந்தை எனப் போற்றப்படும் டாக்டர். சி. நடேசனார், சென்னை திருவல்லிக்கேணியில் **1875**ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை பெயர் கிருஷ்ணசாமி முதலியார். டாக்டர் சி. நடேசனார், தனது ஆரம்பக் கல்வியை ஆசிரியர் ஒருவரால் நடத்தப்பட்ட வீட்டுத் திண்ணைப் பள்ளியில் பயின்றார். பின்னர் கல்லூரியில் மருத்துவம் பயின்று பட்டம் பெற்று மிகச் சிறந்த மருத்துவரானார். அவர் ஏழைகளிடத்தும் வறியவர்களிடத்தும் மிகவும் கருணையுடன் இருந்தார். அவர்களுக்கு எவ்விதக் கட்டணமுமின்றி சிகிச்சை அளித்தார்.

மருத்துவப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதற்கு முன் பித்தாபுரம் மகாராஜா கல்லூரியில் விரிவுரையாளராகவும், பின்னர் அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்றிருந்த கோர்டன் வுட்ராப் என்ற நிறுவனத்தில் துபாஷாகவும் பணிபுரிந்தார். ஆனால்

அப்பணிகள் அவருக்கு மனநிறைவு அளிக்காததால், அவர் மருத்துவர் தொழிலை மேற்கொண்டு புகழ்பெற்று செல்வந்தரானார்.

உயர் ஜாதியினரால் கீழ்த்தரமாக நடத்தப்பட்டு துன்பத்திற்கு ஆளான வருவாய்த்துறை மற்றும் சில துறைகளின் பணியாளர்களின் "தி மெட்ராஸ் யுனைடெட் லீக்" என்ற அமைப்பின் செயலாளராக டாக்டர். சி. நடேசனார் செயல்பட்டார். **1912**ஆம் ஆண்டு 'சென்னைத் திராவிடர் சங்கம்' (Dravidian Association of Madras) என்ற அமைப்பை உருவாக்கினார்.

முதியோர்களுக்காக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் உதவியுடன் மாலை நேரங்களில் வகுப்புகளை நடத்தினார். மேலும் எழுத்தறிவில்லாதவர்களுக்குக் கல்வி போதித்தார். அந்நாட்களில் உயர் ஜாதியினரால் நடத்தப்பட்ட உணவு விடுதிகளில் உயர்ஜாதியினரைத் தவிர வேறு எவரும் செல்லமுடியாது; அங்கு அமர்ந்து உணவு உண்ண முடியாது. இதனால் உயர்கல்வி பயில சென்னைக்கு வந்த மாணவர்கள் மிகவும் அவதியுற்றனர். அம்மாணவர்களின் துயர்துடைக்க **1916**ஆம் ஆண்டு ஜுன் திங்களில் "திராவிடர் சங்க விடுதி" என்ற பெயரில் விடுதி ஒன்றைத் தொடங்கினார். பணம் அளிக்கும் வசதியுள்ளவர்களிடமிருந்து சிறிய தொகை பெற்றுக்கொண்டு ஏழை மற்றும் மிகவும் வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு இலவசமாகத் தங்குமிடம் மற்றும் உணவளித்து டாக்டர். சி. நடேசனார் அவர்களே விடுதியை மேற்பார்வையிட்டு

வந்தார். திராவிடர் சங்கம் அடிக்கடி கூட்டங்களை நடத்தியது. அக்கூட்டங்களில் சர்.பிட்டி. தியாகராயர், டாக்டர். டி.எம்.நாயர், எல்.டி. சாமிக்கண்ணு, திரு.வி.க. மற்றும் சிங்காரவேலர் போன்ற கல்வியாளர்கள் சீரிய உரைகள் ஆற்றினர். பிற்காலத்தில் திராவிடர் சங்கத்துக்கு அரசியல் ரீதியாக எதிரியாக இருந்த டாக்டர். அன்னி பெசன்ட் அவர்கள் கூட **30.10.1914**இல் இச்சங்கத்தில் உரையாற்றியுள்ளார். இத்தகைய பேச்சுகள் தியாகராயர், மதத்துடன் கொண்டிருந்த பற்றினை சிறிது சிறிதாக குறைத்தன.

டாக்டர். சி. நடேசனார் அவர்கள் சென்னை நகராட்சி மன்றத்தின் உறுப்பினராக இருந்தபோது சென்னை புறநகர் பகுதியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்டோரின் வசிப்பிடங்களுக்கு அருகில் குப்பைகளைக் கொட்டலாம் என்ற நகராட்சி மன்றத்தின் முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதனைத் தடுத்தார். திரு.வி.கல்யாணசுந்தரனார் அவர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தன்னையும் ஈடுபடுத்திக்கொண்டு தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டார்.

டாக்டர். சி. நடேசனார் அவர்களின் ஏழை, நசுக்கப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களை முன்னேற்ற வேண்டும் என்ற விருப்பத்திற்கிணங்க சர்.பிட்டி.தியாகராயர் மற்றும் டாக்டர். டி.எம். நாயர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் “தென்னிந்திய நல உரிமைச் சங்கம்'' என்ற அரசியல் கட்சி (நீதிக்கட்சி) **1916**ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் **20**ஆம் நாள் தொடங்கப்பட்டது.

நீதிக்கட்சியின் ஆட்சியில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் சட்டம், தேவதாசி முறை ஒழிப்பு போன்ற தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் நன்மை பயக்கும் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இத்தகைய பெரும்புகழுக்கெல்லாம் வழிவகுத்தவர் டாக்டர். சி. நடேசனார் ஆவார்.

டாக்டர். சி. நடேசனார் அவர்கள் அபரிதமான அன்பு மற்றும் தூய்மையான எண்ணம் கொண்ட மாமனிதர். நீதிக்கட்சியை வளர்க்க அயராது பாடுபட்ட தொழிலாளர்களின் தோழர். திராவிட மக்களை விழிப்புறச் செய்த திராவிட இனத்தின் பாதுகாவலராகப் போற்றப்படும் டாக்டர். சி.நடேசனார் அவர்கள் **18.2.1937**இல் மறைந்தார்.

## Dr.C.NATESAN

(1875-1937)

- ★ Dr.C.Natesan, hailed as the Father of the Dravidian movement was born in Triplicane, Madras in the year 1875.
- ★ His father was Krishanaswamy Mudaliar. In the beginning he had education in a school conducted by a teacher on the raised platform of his house itself. Later on he studied in primary school to college and became a graduate.
- ★ Subsequently he studied in Medical College, received degree and was an outstanding medical practitioner.
- ★ He was very sympathetic to poor and downtrodden. He gave them treatment without getting any fees. But he received fees for treatment from the rich.
- ★ Before engaging himself in medical profession, he worked as lecturer in Pithapuram Maharaja College and later as Dubasha in Gordon Woodrof Company which was very famous then. As these jobs did not provide him mental satisfaction, he undertook medical profession and became popular and rich.

## Dr.Natesan and the Dravidian Movement

- ★ Some employees of the Revenue department and some other departments who suffered ill treatment from higher caste people founded "The Madras United League" and Dr.Natesan became its secretary.
- ★ In the year 1912, Madras Dravidar Sangam (The Madras Dravidian Association) was founded by him.

## The outstanding performance of the Dravidar Sangam

- ★ He conducted classes for senior citizens in the evening hours with the help of government employees and teachers and imparted education to the uneducated.
- ★ In those days people other than those belonging to higher castes could not go to and sit and eat in hotels run by higher caste members. Due to this, students who came to Madras for higher education suffered much. In order to alleviate their sufferings he started a hostel in the name of 'Dravidian Association Hostel' in June 1916. Collecting a small amount from those who could afford Dr.Natesan personally supervised

the hostel providing place of stay and food free of cost to students from poor and downtrodden families.

- ★ The Dravidar Sangam frequently organized meeting and scholars like Sir Pitty. Theyagarayar, Dr.T.M.Nair, I.D.Samikannu, Thiru. Vi.Ka. and Singaravelar delivered brilliant speeches in them. Even Dr.Annie Besant, who in the later days became politically against this movement, spoke in this Sangam on 30.10.1914.
- ★ Such speeches slowly eradicated Theyagarayar's attachment to religion. Such instances led many to acclaim Dr.Natesan as the father of the Justice Party and the 'Dravidar Sangam' his offspring.

**Municipal works of Natesan**

- ★ While he was a member of the Madras Municipal Council, he opposed and prevented the decision of the Municipal Council to dump garbage near the residence of Scheduled caste people living in the periphery of the town.

**Interest in the welfare of workers**

- ★ He involved himself in trade union activities of Thiru V.Kalyana Sundaranar for the welfare of workers.

## Justice Party

- ★ As per the wish of Dr.Natesan for uplifting poor, downtrodden and oppressed communities, a political party called 'South Indian Welfare Society' was found on November 20, 1916 with the co-operation of Theyagarayar and T.M. Nair. Later on it acquired the name 'Justice Party' and carved a niche for itself in history.

- ★ In the governments of the Justice Party formed subsequently various important legislations like Hindu Religious and Charitable Endowments Act and the Legislation for abolishing devadasi system were enacted greatly benefiting the people of Tamil Nadu. Dr.Natesan paved away for such glories.

- ★ Dr.Natesan is hailed as a great man with profuse love and virtues. His rational thoughts opened the eyes of the ideologically blind and brought all those who were in the dark to light. He was the symbol of labour and tirelessly worked for developing the Justice Party and was responsible for the awakening of the Dravidian people, Dr.Natesan passed away on 18.2.1937.

# டாக்டர். டி.எம். நாயர்

## (1868–1919)



தாரவாத் மாதவன் நாயர் என்ற டி.எம். நாயர் கேரள மாநிலம், கோழிக்கோடு கொடுவையூரில் 1868 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 15ஆம் நாள் சி. சங்கரன் நாயர்– கண்மினி அம்மா ஆகியோரின் மகனாகப் பிறந்தார்.

தனது பள்ளிக்கல்வியை பாலக்காட்டிலும் முதுநிலைக் கல்வியை சென்னை மாநிலக் கல்லூரியிலும் முடித்து, சிறிது காலம் சென்னை மருத்துவக் கல்லூரியில் பயின்று, பின்னர் 1894ஆம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள எடின்பரோ பல்கலைக்கழகத்தின் எம்.பி.சி.எம் எனும் முதுநிலை பட்டம் பெற்றார். 1896ஆம் ஆண்டு காது, மூக்கு மற்றும் தொண்டை நோய்களுக்கான சிறப்பு சிகிச்சையைப் படிப்பை பிரைட்டனில் பெற்று, அது தொடர்பான எம்.டி பட்டத்தையும் எடின்பரோ

பல்கலைக் கழகத்தில் பெற்றார். மாணவப் பருவத்தில் மாணவர் இயக்கத்தில் ஈடுபட்டு பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி மாணவர் கூட்டமைப்பின் தலைவராகவும் செயல்பட்டார். 'மாணவன் ஒற்றுமை'பத்திரிக்கையின் பதிப்பாசிரியர்களில் ஒருவராகவும் பின்னர் செயலாளராகவும் பணியாற்றி, இலண்டனில் உள்ள இந்தியர் கழகத்தின் துணைத்தலைவர் போன்ற பல பொறுப்புகளை வகித்து பொதுச் சேவையில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். 1897ஆம் ஆண்டு சென்னை திரும்பி, அந்நாளில் தலைசிறந்த மருத்துவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். நீதிக்கட்சியை நிறுவிய மூவரில் சர். பிட்டி. தியாகராயர் மற்றும் டாக்டர். சி. நடேசனார் ஆகியோருடன் டாக்டர். டி.எம். நாயர் அவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. நீதிக்கட்சியால் நடத்தப்பட்டு வந்த "Justice" என்ற ஆங்கில நாளிதழின் பதிப்பாசிரியராகவும் இருந்தார்.

முதல் உலகப்போரின் பின் விளைவாக, இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்தியர்களுக்கான அமைச்சராக இருந்த மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு இந்திய மக்களுக்கு அரசியல் ரீதியாக அதிக அதிகாரம் வழங்க வேண்டும் எனவும், இந்தியாவிற்கு பிரதிநிதித்துவ ஆட்சி அளித்து இங்கிலாந்து பேரரசின் ஒரு பகுதியாக இருக்கலாம் எனவும் அறிக்கை ஒன்றை இங்கிலாந்து பாராளுமன்றத்தின் முன் வைத்தார். மாண்டேகு தலைமையிலான

குழுவொன்று **24.12.1917** அன்று இந்தியாவிற்கு வந்து மேற்குறிப்பிட்ட அறிக்கை மீதான இந்திய அரசியல்வாதிகளின் கருத்தினைக் கேட்டறிந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளும் குழுவிற்கு தங்களது கருத்துகளை வெளிப்படுத்தின. நீதிக்கட்சி, குழுவிற்கு அளித்த தனது அறிக்கையில் பணியிடங்களில் இடஒதுக்கீடு செய்யப்படும்போது நிர்வாகம் உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ அடிப்படையில் செய்யப்பட வேண்டும் என குறிப்பிட்டது.

**16.8.1918** தஞ்சாவூரில் நடைபெற்ற நீதிக்கட்சியின் மாநாட்டில் சர். ஏ.டி.பன்னீர்செல்வம் அவர்களின் முயற்சியால் டாக்டர் டி.எம். நாயர் தலைமையிலான பிரதிநிதிகள் குழுவின் பயணம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காரணத்தால் தடைப்பட்டுப்போனது. ஆனால் டாக்டர். டி.எம். நாயர், நீரழிவு நோய்க்கு சிகிச்சை பெற வேண்டும் என்று தெரிவித்து அனுமதி பெற்று இலண்டன் சென்றார். டாக்டர். டி. எம். நாயர் சிகிச்சை பெற்று திரும்பும் வரை அரசியல் பேசுவதற்கு அங்கு அவருக்கு கடுமையான தடை விதிக்கப்பட்டது. ஆனால் லாமிங்டன் பிரபு மற்றும் சைடன் ஹாம் பிரபு ஆகியோர் டாக்டர். டி.எம். நாயர் மீது விதிக்கப்பட்ட தடை முறையற்றது எனக் கண்டனம் தெரிவித்ததைத் தொடர்ந்து இங்கிலாந்து பாராளுமன்றம் தடையை விலக்கிக் கொண்டது. அதன் மூலமாக **2.10.1918** ஆம் ஆண்டு இங்கிலாந்து பாராளுமன்றத்தில் பேசும் வாய்ப்பை டாக்டர் டி.எம். நாயர் பெற்றார்.

அப்போது நிலத்தைச் சொந்தமாக வைத்திருக்கும் திராவிட மக்கள் உயர் ஜாதி மக்களின் அடக்கு முறையால் பாதிக்கப்படுவதை புள்ளிவிவரத்துடன் எடுத்துக் கூறி நீதிக் கட்சியின் கொள்கைகள் மற்றும் கருத்துக்களை விளக்கினார். டி.எம். நாயர் அறிவித்த தெளிவான விளக்கத்தை கேட்ட பின்னர் "வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துடன் கூடிய அரசியல் சீர்திருத்தம் தான் தேவை" என்பதை இங்கிலாந்து பாராளுமன்றம் ஒத்துக்கொண்டது. இந்நிகழ்வு, டாக்டர். டி.எம். நாயர் அச்சமில்லாமல் தனக்கு சரி என உணர்வதைப் பேசுபவர் என்பதைப் பறைசாற்றுகிறது.

அச்சமயத்தில், மாண்டேகு செம்ஸ்போர்டு குழுவின் அறிக்கை இங்கிலாந்து பாராளுமன்றத்தின் இணைப் பொதுக் குழுவின் முன் ஆய்விற்காக வைக்கப்பட்டது. பின்னர் நீதிக்கட்சியின் பிரதிநிதிகள் குழுவை இங்கிலாந்திற்குச் சென்று இணைப் பொதுக் குழுவுடன் விவாதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தன்னுடைய நோய்வாய்ப்பட்ட உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் பிரதிநிதிகள் குழுவுடன் ஒரே ஆண்டில் இரண்டாம் முறையாக இலண்டன் சென்ற பொழுது, **1919** ஆம் ஆண்டு ஜூலை 17 ஆம் நாள் அதிகாலை இலண்டனில் காலமானார்.

ஒடுக்கப்பட்டோரின் உயர்வுக்கான கொடியினை அனைத்து திசைகளிலும் நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் ஏற்றிவைத்தவர்

டாக்டர் டி.எம். நாயர். அன்னாரின் சீரிய வழிகாட்டுதல் மற்றும் தலைமையின் கீழ் நீதிக்கட்சிமிக விரைவான வளர்ச்சி கண்டது. ஒடுக்கப்பட்டு வாய்மூடியாக இருந்த இலட்சோபலட்சம் மக்களை அக்கட்சியின் கொள்கைகள் ஈர்த்தன. நீதிக்கட்சியினால் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்திற்காக நடத்தப்பட்ட சோர்விலாப் போராட்டம் துணிவுமிக்க சாதனையாக பதக்கத்தில் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

## Dr. T.M. NAIR

(1868-1919)

★ 'Taravath Madhavan Nair' alias 'T.M. Nair' was born on 15 January 1868 at Koduvayur in Kozhikode district in the state of Kerala.

★ His father was Sankaran Nair and mother Kannmini Amma:

★ He was called by one and all shortly as T.M. Nair denoting 'Taravath' Madhavan Niar, 'Taravath' being his family name. He had his school education at Palghat and completed M.A. higher studies in Presidency College, Madras.

★ He studied in Madras Medical College for some time and later in 1894 obtained the degree of M.A., Ch.B. in Edinburgh, UK. In 1896, he also obtained a MD degree at Edinburgh. Specialising in the treatment of Ear, Nose and Throat diseases at Brighton, he received special training for treatment of these diseases in Paris.

★ During his student days he was involved in students' movements. He was involved in public service by taking up various responsibilities like Secretary of the students' union, one of the editors of a journal called 'University Student' and Secretary and later Vice-President of Indians' Association in London.

★ He returned to the motherland in 1887 and was one of the best doctors at the time.

★ Dr.Nair was one of the triumvirate along with Sir. Pitty Theyagarayar and Dr.Natesan who founded the Justice Party.

★ He was also the editor of the English newspaper 'Justice', run by the Justice Party.

**Post - World War Political Reforms**

★ In the aftermath of the First World War, the Ministers for India, Montague and Chelmsford placed a report in the British Parliament, stating that the people of India would be given more powers in politics and India would be given representative rule as a part of British empire.

தமிழரசு
அலுவலகப் பிரதி

★ A committee led by Montague came to India on 24.12.1917 to elicit the views of Indian Politicians on the report.

★ Various political parties expressed their views before the committee.

★ In the reports submitted by the Justice Party it was stated that reservation of posts should be made on the basis of communal representation in all departments, including administration.

★ But the conference of the Justice Party held on 16.8.1918 at Thanjavur on the efforts taken by Sir. A.T. Panneer Selvam decided to send a delegation led by Dr.Nair to London to press for the need for communal representation. But the journey of the delegation was prohibited due to the on-going world war then.

★ But Nair went to London obtaining permission stating that he was going there to get treatment for diabetes.

★ Nair was strictly prohibited from discussing politics there till he returned after getting treatment. But the

British Parliament removed the condition following the condemnation by Lord Lamington and Lord Syden ham that the condition imposed on Nair was improper. As a result Dr.Nair got an opportunity to speak in the British Parliament on October 2, 1918. When he showed with statistics that the Dravidian people, who owned the land, would be terribly affected by the domination of higher caste people and explained the priciples and concepts of the Justice Party.

★ On hearing the clear explanation given by Dr.. Nair, the British Parliament conceded that political reform with communal representation was needed.

★ This showed that Dr. Nair was fearless and did not hesitate to speak out what he felt was just.

★ At this stage, the report of Montague-Chelmsford committee was placed for study by the joint common committee of the British Parliament. Arrangements were made for a delegation of the Justice Party to go to Britain to discuss with that joint common committee.

- ★ Leaving for London for a second time in a year in that delegation unmindful of his illhealth, Dr.Nair passed away in the early hours in July 17, 1919 in London.

- ★ Dr.Nair unfurled the flag of uprising of the oppressed in all directions and nook and corner of the country. Under his able guidance and leadership the Justice Party registered a very fast progress. Its principles attracted the minds of millions of voiceless people.

- ★ The untiring struggle conducted by the Justice Party for the cause of communal representation was a heroic legend.

★ ★ ★

